Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 11 2024

புதன்கிழமை டிசெம்பர் 11, 2024 | ஒளி: 10 கதிர் 112 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

### காணாமல் போன உறவுகளின் சங்கத்தினர்

## தீச்சட்டி ஏந்தி, நீதி கேட்டு போராட்டம்

க.அகரன்

சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசெம்பர் 10ஆம் திகதியன்று வடக்கு,கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் வவுனியாவில் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர்.

வவுனியா கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய குறித்த பேரணி பழைய பேருந்து நிலையப் பகுதியில் முடிவடைந்தது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கருத்து தெரிவித்த அவர்கள்,

சர்வதேச மனித உரிமைகள் நாளாக உலகம் தோறும் செவ்வாய்க்கிழமை (10) அனுஷ்டிக்கப்படுகிறது. சர்வதேசமும் அனைத்துலகமும் ஈழத்தமிழரைக் கைவிட்ட



நிலையில், மனிதர்களாக எம்மை பார்ப்பதில்லை எந்த உரிமையும் வழங்கப்படவில்லை. நமக்குச் சர்வதேச நீதி வருமா? என்ற கேள்வியோடு இந்த தினத்தில் நாம் போராடி வருகிறோம் உள்நாட்டுப்




பொறிமுறையில் நம்பிக்கை இல்லாத நிலையில், ஐ.நா. அனைத்துலக சாசனத்துக்கு அமைய ஐக்கிய நாடுகளின் அவையின் கீழ், சர்வதேச நீதிப் நெறிமுறையை நாடி நிற்கின்றோம்.

தொடர்ச்சி P2

## இந்தியா செல்கிறார் ஜனாதிபதி அனுர



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர், அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு, அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த விஜயத்தில் ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் மற்றும் பிரதி நிதியமைச்சர் ஆகியோரும் பங்குபற்றவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் கூறியுள்ளார்.

### பாராளுமன்ற இணையத்தளத்தில் இருந்து

# சபாநாயகரின் 'கலாநிதி' பட்டம் நீக்கம்






சபாநாயகர் அசோக ரன்வலவின் கல்வித் தகுதி தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில், இலங்கை பாராளுமன்ற இணையத்தளம் அவரது சுயவிவரத்தில் இருந்து.'கலாநிதி' என்ற சொல்லை நீக்கியுள்ளது.

முன்பு 'கலாநிதி' அசோக ரன்வல என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இப்போது அவரது பெயர் 'அசோக ரன்வாலா எம்.பி' என்று தோன்றுகிறது. இது அவர், 'கலாநிதி' பட்டம் பெற்றதாகக் கூறப்படுவது சட்டப்பூர்வமானதா? என்பது குறித்து மேலும் சந்தேகங்களை எழுப்புகிறது. சபாநாயகரின் சுயவிவரத்திலிருந்து. 'கலாநிதி' என்ற தலைப்பை நீக்கும் வகையில் கடந்த 24 மணி நேரத்திற்குள் இணையதளம் புதுப்பிக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இருப்பினும், காப்பகப்படுத்தப்பட்ட பதிப்புகள் மற்றும் Google தேடல் முடிவுகள் இன்னும் தலைப்பைக் காண்பிக்கும், அதே நேரத்தில், தற்போதைய சுயவிவரத்தில் அதைச் சேர்க்க முடியாது.

அவரது நற்சான்றிதழ்கள் குறித்து சமூக ஊடக ஆர்வலர்கள், தங்களின் பேஸ்புக்கில் கேள்வி எழுப்பியதை அடுத்து சர்ச்சை வெடித்தது, இது பொறுப்புக் கூறலுக்கான பொது அழைப்புகளுக்கு வழிவகுத்தது.

முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரியவும் சபாநாயகரின் 'கலாநிதி' பட்டத்தை நிரூபிக்குமாறு சவால் விடுத்துள்ளார்.

சபாநாயகர் பதிலளிக்கவில்லை என்றால் தேசிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தேசப்பிரிய வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2



## சபாநாயகரின் 'கலாநிதி' பட்டம் குறித்து விரைவில் விளக்கம்

சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல தனது கலாநிதி பட்டம் தொடர்பாக வெளிவரும் பல்வேறு கருத்துகள் தொடர்பில் இன்னும் சில நாட்களில் அறிக்கை வெளியிடுவார் என அமைச்சரவைப் பேச்சாளர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ இன்று தெரிவித்தார்.

சபாநாயகரின் கலாநிதி பட்டம் தொடர்பான செய்திகள் உண்மையாக இருந்தால், அவருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், சபாநாயகரின் அறிக்கைக்குப் பின்னர் அது குறித்து அறிவிக்கப்படும் என்றார்.

"சபாநாயகர் தகுதிகள் குறித்து அறிக்கை வெளியிட்ட பிறகு பரிசீலிப்போம்.அறிக்கைகள் உண்மையாக இருந்தால் எடுக்க வேண்டிய முடிவையும், பொய்யாக இருந்தால் எடுக்க வேண்டிய முடிவையும் சொல்கிறேன்" என்றார்.

தொடர்ச்சி P2



## காட்டு விலங்குகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க ஆராய்ச்சி

காட்டு விலங்குகள் பயிர்களை அழிப்பதிலிருந்து பாதுகாக்க நீண்ட கால, விஞ்ஞான மற்றும் நிலையான தீர்வை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் சுற்றாடல் அமைச்சு மற்றும் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர், இந்த பிரச்சினையை உணர்வுப்பூர்வமாகக் கையாள வேண்டும் என்றார். புள்ளிவிவரங்களின்படி, சில விலங்கு இனங்களின் தொகை கணிசமாக அதிகரித்துள்ளது, இது மக்களுக்கும் அவர்களின் பயிர்களுக்கும் அன்றாட வாழ்க்கையை முன்னெடுப்பதில் சவாலை ஏற்படுத்துகிறது.

மக்களின் வாழ்வாதாரம், வன விலங்குகளின் உயிர்கள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் தற்போது சமமான அணுகுமுறையை நடைமுறைப்படுத்துகிறது என்றும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2

### திகாமடுல்ல மாவட்ட பொதுத் தேர்தல்


## "வாக்குகளை மீள எண்ண வேண்டும்"




நூருல் ஹூதா உமர்

கடந்த பொதுத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணியில் போட்டியிட்ட தேசிய காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு கல்முனை பிராந்திய அலுவலகத்திற்கு விஜயம் செய்து நடந்து முடிந்த பொதுத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் அடங்கிய மனுவொன்றை உத்தியோகப்பூர்வமாக, செவ்வாய்க்கிழமை(10) கையளித்தார்.

தொடர்ச்சி P2



## உணவு கொள்கை பாதுகாப்பு குழு

சகல பிரஜைகளுக்கும் குறைந்தபட்ச உணவுத் தேவையைப் போதியளவிலும் தரமாகவும் தாங்கிக்கொள்ளக் கூடிய விலையிலும் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் உணவு கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தேசிய உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் பாதுகாப்பான முறையில் உணவு பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் முதன்மை பணியாகும் என்ற வகையில், சகல பிரஜைகளுக்கும் குறைந்தபட்ச உணவுத் தேவையைப் போதியளவிலும், தரமாகவும் தாங்கிக்கொள்ளக் கூடிய விலையிலும், பெற்றுக்கொடுக்கும் நோக்கில் உணவு கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவை, ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் நியமிப்பதற்காக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

## "அனைவரும் மக்கள் ஆணைக்கும் இறைமைக்கும் கட்டுப்பட்டுள்ளோம்"

அனைத்து அதிகாரங்களும் மக்களின் இறைமையில் இருந்தே உருவாகிறது. நாம் கட்டுப்பட்டுள்ள சட்டம், எமக்குள்ள வரையறைகள் இவை அனைத்திற்கும் அப்பால் நாம் அனைவரும் மக்கள் ஆணைக்கும் இறைமைக்கும் கட்டுப்பட்டுள்ளோம் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

சர்வதேச ஊழல் எதிர்ப்பு தின நிகழ்வு, திங்கட்கிழமை (09) நடைபெற்றது. அதில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த மக்கள் ஆணை எம் அனைவருக்கும் சமூகத்தின் எதிர்பார்ப்பை வெளிக்காட்டியுள்ளது என்று நான் கருதுகிறேன்.எமது நாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில்



பல்வேறு விதமாக மக்கள் ஆணை வெளிப்படுத்தப்பட்டது. ஒரு சமயம் யுத்தம் நிறைவு செய்யப்பட்டதன் காரணமாக மக்கள் ஆணை வெளிப்படுத்தப்பட்டது.

மற்றொரு சமயம் நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக மக்கள் ஆணையின் பிரதான போக்கு பிரதிபலிப்பானது.

தொடர்ச்சி P2



## கூட்டமைப்பாக செயற்படலாமா?

### ஆராய்வதாக கூறுகிறார் செல்வம் எம்.பி.

க.அகரன்

முன்னர் ஒன்றாக இருந்த கட்சிகளை மீள ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயல்படலாமா என்பது தொடர்பில் பேசிக் கொண்டிருப்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து பெறப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் தெரிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு, செவ்வாய்க்கிழமை (10) வழங்கிவைக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தீச்சட்டி ஏந்தி, நீதி கேட்டு போராட்டம்

எங்கள் உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களே! அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அல்ல. இன்று குழந்தைகளை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வரிசையில் இலங்கை சர்வதேச ரீதியில் முதலாம் இடத்தில் இருக்கிறது.

எமது 40ற்கு மேற்பட்ட குழந்தைகளின் முகங்கள் இன்றும் எம் கண்முன்னே அழியாத உயிர்ப்புக்களாக மிளிர்ந்து கொண்டிருக்கிறது. இறுதிப்போரில் வலிந்து காணாமல் போன உறவுகள் வரிசையில் இந்தக் குழந்தைகள் என்ன ஆனார்கள் என்ற விம்மலும் கண்ணீரும் இன்னும் எம்மை வருத்துகிறது. எமக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியை நாம் சர்வதேசத்திடம் கேட்டுக்கொள்கிறோம்.

இது அன்னையர் தினமோ, ஆசிரியர் தினமோ அல்ல, அவ்வாறு கூறி கடந்து செல்ல முடியாது. இது மனித உரிமைகள் தினம். மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். எமது உயிருக்கும் மேலான வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கேட்டுப் போராடிக் கொண்டிருக்கும் எம்மையும் மதிக்க வேண்டும். மனித உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும்.

ஆனால், இலங்கையில் பல்லாயிரம் உயிர்கள் கொல்லப்பட்டும் பல்லாயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர். இதுவரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிய 300க்கும் அதிகமான உறவுகள் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உறவுகளை இனி யார் தேடுவது. எப்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நீதி கிடைத்து எம்மைப் போல் அழுபவர்களின் குரல் ஓய்கிறதோ, அன்று தான் எமக்கு மனித உரிமைகள் தினம் என வலியுறுத்தி நிற்கின்றோம் என்றனர்.

# காட்டு விலங்குகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க ஆராய்ச்சி



சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் தங்கள் பயிர்களைச் சேதப்படுத்தும் விலங்குகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க மக்களை அனுமதிப்பது குறித்து தங்கள் கருத்துக்களைக் கூற உரிமை உண்டு. இருப்பினும், நிலையான தீர்வுகளைக் கண்டறிய விவாதங்கள் அவசியம்.

விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. குரங்கு, மயில், யானை போன்ற வன விலங்குகளிடம் இருந்து பயிர்களைக் காக்க விவசாயிகள் போராடி வருகின்றனர். இவ்விலங்குகளின் அதிகரித்து வரும் அச்சுறுத்தல் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் சிலர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## சபாநாயகரின் 'கலாநிதி' பட்டம் குறித்து விரைவில் விளக்கம்

சபாநாயகர் அசோக ரன்வலவின் கலாநிதி பட்டம் தொடர்பாக சமூக ஊடகங்களில் பல்வேறு தகவல்கள் பரவி வருவதுடன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரியவும் தற்போதைய சபாநாயகரிடம் கலாநிதி பட்டம் இருப்பது உண்மையென்றால் அதனை நிரூபித்துக் காட்டுமாறு அண்மையில் சபாநாயகருக்கு சவால் விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.


பாராளுமன்ற இணையத்தளத்தில் இருந்து

# சபாநாயகரின் 'கலாநிதி' பட்டம் நீக்கம்

ரன்வல சபாநாயகராக நியமிக்கப்பட்ட போது, பாராளுமன்றத்தின் ஊடக அறிக்கை, அவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இரசாயன பொறியியலில் பட்டம் பெற்றதோடு, ஜப்பானின் வசேடா பல்கலைக்கழகத்தில் உயிர் வேதியியலில் முனைவர் பட்டம் பெற்றவர் என விவரித்தது. அவர் தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினராகவும் முன்பு உள்ளூர் அரசாங்கப் பதவிகளில் பணியாற்றியவராகவும் அறிமுகப்படுத்தப்பட்டார்.

பலமுறை விளக்கம் கேட்டும் சபாநாயகர் பதில் அளிக்கவில்லை.

இதேவேளை, சபாநாயகரின் தகுதிகள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு




சபாநாயகர் பதில் அளிப்பார் என அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்துள்ளார். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் சாத்தியமான நடவடிக்கைகள் குறித்துக் கேட்டபோது, சபாநாயகரின் அறிக்கையைத் தொடர்ந்து அடுத்த நடவடிக்கைகள் அறிவிக்கப்படும் என்று பேச்சாளர் கூறினார்.

# "அனைவரும் மக்கள் ஆணைக்கும் இறைமைக்கும் கட்டுப்பட்டுள்ளோம்"

2024 மக்கள் ஆணையில் இலஞ்ச ஊழலுக்கு எதிரான மக்களின் எதிர்பார்ப்பே பிரதானமானதாக உள்ளது. இந்த இடத்தில் இலஞ்ச ஊழல் திணைக்கள அதிகாரிகள் ,பொலிஸ் அதிகாரிகள், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் நீதித் சேவையைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் உட்பட பல முக்கிய துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் உள்ளனர். அரசியல் அதிகாரம் சார்பில் நான் இருக்கிறேன்.

அரசியலமைப்பின் ஊடாக நாம் ஒவ்வொருவருக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் ஊடாக ஒவ்வொருவருக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டங்கள் விதிமுறைகள், சுற்று நிருபங்கள் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவருக்கும் அதிகார எல்லைகள் அரசியலமைப்பின் ஊடாகவும் சட்டத்தின் ஊடாகவும் விதிக்கப்பட்டுள்ளன.

"கௌரவமான நாட்டில் முன்மாதிரியான முன்னோடிகளாக நாம் மாறுவோம்" என்ற தொனிப்பொருளை நான் கண்டேன்.நாம் என்றால் எம்மைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. இங்கு யார் இல்லை. அரசியல் அதிகாரத்தின் சார்பில் நான் இருக்கிறேன். ஜனாதிபதி செயலாளர்.பிரதமரின் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் இருக்கிறார்கள்.உயர் நீதிமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நீதிபதிகள் உள்ளனர். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பொறுப்பான பொலிஸ்மா அதிபர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் உள்ளனர். இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணையாளர்கள் இருக்கிறார்கள். வேறு யார் குறைவாக உள்ளனர்?அவ்வாறானால் எங்குப் பிரச்சினை உள்ளது? நாம் நேர்மையாக ஆராய்ந்து பார்த்தால் பிரச்சினை இருப்பது இங்குதான்.

குற்றப்புலனாய்வுத் திணைக்கள கோப்பொன்று எவ்வாறு மேலேயும் கீழேயும் செல்கிறது? ஏழு எட்டு வருடங்களாகக் கோப்புகள் அலுமாரிகளுக்குள் எவ்வாறு சிக்கியிருக்கிறது? பிரச்சினை இங்கு கிடையாதா? நான் இங்கு சொல்லும் விடயத்தை எவரும் தனிப்பட்ட ரீதியில் பார்க்காதீர்கள். சமூகத்தில் ஏற்பட்டுள்ள அவலத்தின் பாரதூரமான நிலையைத் தான் நான் இங்கு கூறுகிறேன்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பும் ஆவணம் எந்த நடவடிக்கையும் இன்றி எவ்வாறு இருக்க முடியும்? பிரச்சினை எங்குள்ளது?


நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும் ஒரு வழக்கு எவ்வாறு ஏழு, எட்டு மாதங்களாகத் தாமதமாகிறது? வேறு தினமொன்றைப் பெறுவதற்காக எவ்வாறு தாமதம் ஏற்படுகிறது? அனைவருக்கும் தமது நிறுவனத்தில் அவ்வாறான பிரச்சினை ஏற்படுவது தொடர்பில் காரணம் இருக்கலாம். காரணம் கூற முடியும். தங்களிடம் சட்ட அதிகாரிகள் இத்தனை பேர் தான் உள்ளனர். இத்தனை பேருக்கு குறைபாடுள்ளது. அதனால் தாமதம் ஏற்படுகிறது என சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கூறமுடியும். இந்தளவு முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்றும் அவற்றை விசாரணை செய்து முறையாக வழக்குத் தொடர முடியாதுள்ளது என்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்குக் கூற முடியும். இலஞ்ச ஊழல் திணைக்களத்திற்கும் அதே விடயத்தைக் கூற முடியும். சட்டமா அதிபர் திணைக்களமும் அதே போன்று கூறலாம். ஆனால், பிரச்சினை இங்குள்ளது. பிரச்சினை எமக்கு வெளியில் உள்ளது என யாராவது நினைத்தால் இல்லை, பிரச்சினை எம்மில் தான் உள்ளது.

நாம் அனைவரும் நேர்மையாக முயலாவிட்டால் 'முன்மாதிரியான முன்னோடிகளாவோம்' என்று கூறும் எம்மில் தான் பிரச்சினை உள்ளது. பிரச்சினை இங்கு தான் உள்ளதென்றால் பொதுமக்கள் எவ்வாறு அதற்குப் பொறுப்புக் கூற முடியும் ?பிரச்சினை இங்கென்றால் இலஞ்சம், மோசடியை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்?

முதலில் நாம் எமது மனசாட்சியிடம் வினவ வேண்டும். அரசியல் அதிகாரம் என்ற வகையில் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை முழுமையாகவும் நேர்மையாகவும் இந்த மோசடிகளை ஒழிக்கப் பயன்படுத்துவேன் என நான் உங்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறேன். அது தொடர்பில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

ஆனால், எனக்கு இருக்கும் எல்லைகள் குறித்து நான் அறிவேன். அரசியல் அதிகாரத்திற்கான தலைமைத்துவத்தை எனக்கு வழங்க முடியும். தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுக்கலாம். தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்க முடியும். ஆனால் யார் அவற்றை மேற்கொள்ள வேண்டும்? அவற்றை இங்குள்ள நீங்கள் தான் செய்ய வேண்டும்.

நாம் தற்பொழுது 115ஆவது இடத்தில் இருக்கிறோம். ஆனால் சரியான தகவல்கள் இல்லாததால் தான் அந்த மட்டத்தில் இருக்கிறோம். சரியான தகவல்களைப் பெற்றால் அதனை விட மோசமான நிலை இருக்கும். அண்மைக்காலத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய சம்பவங்கள் தொடர்பில் பல விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அதில் ஒன்று தான் அமெரிக்க சி.ஐ.ஏ. உறுப்பினரான இமாம் சுபேறு சட்டவிரோதப் பணப்பரிமாற்றச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டார். அந்த விசாரணையின் போது, அவருக்கு இலங்கை மத்திய வங்கியினால் 6 மில்லியன் டொலர் வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியானது என்றார்.



# உணவு கொள்கை பாதுகாப்பு குழு

புதிய அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்துக்கு அமைய,

நாட்டுக்குள் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்து உணவு வகைகளையும் உள்நாட்டில் உற்பத்தி செய்தல்.

குறைந்தபட்சம் 03 மாதங்களுக்கு போதிய உணவு தொகை இருப்பை உறுதிப்படுத்தல்.

நாட்டிலுள்ள உணவுத் தொகை தொடர்பில் தகவல் கட்டமைப்பொன்றை நடத்திச் செல்லல்.

உணவு பாதுகாப்புக்குத் தேவையான உற்பத்திகள், களஞ்சியம், விநியோகம், தொகை மற்றும் சில்லறை வியாபாரம் ஆகிய விடயங்களுக்காகத் தனியார்த் துறையின் பங்களிப்பையும் பெற்றுக்கொண்டு பயனுள்ள வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல், என்பனவே இந்த குழுவின் முதன்மை பணிகளாகும்.

அதன்படி, உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிப்படுத்தும் அனைத்து நிறுவனங்களினதும் பங்களிப்புடன் தகவல் மற்றும் தரவுகளின் அடிப்படையில் அறிவியல் பகுப்பாய்வின் ஊடாக, கொள்கை ரீதியான வழிகாட்டல்களை வழங்க, விவசாய, கால்நடை,காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் வர்த்தக,வணிக,உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் ஆகியோரின் இணைத் தலைமைத்துவத்துடன் பிரதமரின் செயலாளர் உள்ளிட்ட உரிய அமைச்சுக்களின் செயலாளர்களின் பங்களிப்புடன் இந்த குழு நியமிக்கப்படவுள்ளது.

# "வாக்குகளை மீள எண்ண வேண்டும்"

திகாமடுல்ல மாவட்டத்தின் தேர்தல் முடிவுகளை மீள எண்ணப்பட வேண்டும் என்பதையும் கடந்த தேர்தல் காலத்தில் தேசிய காங்கிரஸ் தலைவராகத் தன்னை குறிவைத்துப் பின்னப்பட்ட பல நகர்வுகளையும் இடையூறுகளையும் உள்ளடக்கிய பல்வேறு விடயங்கள் இம்மனுவில் விசேடமாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

மனுவைக் கையளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர், நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர்களின் உரிமைகள் திட்டமிடப்பட்ட வகையில் மறுக்கப்பட்டதுடன் வாக்குகள் எண்ணப்பட்டதிலும் பாரதூரமான மோசடிகள் இடம்பெற்றுள்ளன. மேலும், கச்சேரியில் எமக்கு எதிராகச் சதி வலைப் பின்னல் தொடர்ந்து. ஆரம்பத்தில் காலையில் ஒரு விதமாகவும், பின்னர் வேறு ஒரு விதமாகவும் முடிவுகள் அறிவிக்கப்படலாயின. நாம் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட முடிவுகளை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்பதாகக் கையொப்பம் இட்டுக் கொடுக்கவில்லை. வெளிப்படையாகவே ஆட்சேபித்தோம். ஆனால், புதிய ஜனநாயக முன்னணி 88 வாக்குகளால் தோற்றதாக அறிவிக்கப்பட்டது. நாம் வாக்குகள் எண்ணப்பட வேண்டும் என்று சட்டப்படி முறையாகக் கச்சேரியில் கோரினோம். ஆனால் வாக்குகளை மீண்டும் எண்ணப்படவே இல்லை. இதை ஆட்சேபித்து கொழும்பில் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் எழுத்து மூலம் பல தகவல்களையும் திரட்டியுள்ளோம்.

அவசியம் ஏற்படுகின்ற பட்சத்தில் உயர் நீதிமன்றங்களில் வழக்கு நடவடிக்கைகளை நிச்சயம் மேற்கொள்வோம். நீதிக்கான எமது போராட்டம் தொடரும். நாம் கடந்த காலங்களில் அரசியலில் பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வெற்றி கண்டிருக்கிறோம் என்றார்.

# கூட்டமைப்பாக செயற்படலாமா?

இதில் கலந்து கொண்ட பின்னர், கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கிறோம். எமது பாராளுமன்ற குழுவில் ஒரு ஒற்றுமை வேண்டும் என்று நினைக்கிறேன். அந்த ஒற்றுமை இல்லாமையினால் எமது தேசத்தில் பல மாற்றங்கள் உருவாகியுள்ளது. அது தொடர்ந்தால் இங்கு இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிடும்.

எனவே, இனம் சார்ந்த விடுதலையினை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற வகையில் நாம் ஒன்றிணைய வேண்டும். ஒன்றிணைந்தால் மக்கள் எங்களுடன் நிற்பார்கள் என்றார்.

எனவே, பாராளுமன்றுக்குள்ளும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு அணியாகச் சேர்ந்து பொது விடயங்களில் ஒன்றாகக் குரல் கொடுக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும். அத்துடன், வடக்கு, கிழக்கில் முன்னர் ஒன்றாக இருந்த கட்சிகளை மீள ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படலாமா என்பது தொடர்பிலும் பேசிக்கொண்டிருக்கிறோம்.

அத்துடன் பெருவாரியான வாக்குகளைப் பெற்ற இந்த அரசாங்கத்தின் ஜனாதிபதி பேசியபோது, ஒரு மணியைக் கூட வெளியிலிருந்து இறக்குமதி செய்யமாட்டோம் என்று சொல்லியிருந்தார். ஆனால், இன்று நிலைமை மாறி இறக்குமதி செய்யும் சூழல் வந்துள்ளது. சர்வதேச நாணய நிதிய விடயத்தில் எந்தவொரு மறுப்பு தெரிவிக்காமல் இவர்கள் கையொப்பம் இட்டுள்ளனர்.

எனவே, இந்த நிலையில் அரசாங்கம் சென்றால் மீண்டும் வரிசை யுகம் வரும் சந்தர்ப்பம் ஏற்படும். எனவே அரசாங்கம் நிதானமாகச் செயல்பட வேண்டும். இன்று சாதாரண மக்கள் கூட தேங்காய் வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் சூழலை மாற்ற வேண்டும் என்றார்.

## முல்லைத்தீவில்...




சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.
முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக செவ்வாய்க்கிழமை (10) காலை 10.30 மணியளவில் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.
சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.











## தீச்சட்டி ஏந்தி நீதி கேட்டு போராட்டம்



சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசெம்பர் 10ஆம் திகதியன்று, வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் வவுனியாவில் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர்.
வவுனியா கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய குறித்த பேரணி பழைய பேருந்து நிலையப் பகுதியில் முடிவடைந்தது.

–க.அகரன்












# "நீதி வேண்டும்"

கனகராசா சரவணன்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் சர்வதேச மனித உரிமைகள் தினமான, டிசெம்பர் 10ஆம் திகதியன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம சர்வதேச மனித உரிமை தினத்தையிட்டு காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

இதையடுத்து, மட்டக்களப்பு தந்தை செல்வா பூங்கா வீதி சுற்று வட்டத்தில் காலை 9 மணிக்குப் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இ.சிறிநாத். ஞா.சிறிநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியேந்திரன் கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் நடராசா உட்பட ஆயிரக்கணக்கான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்



ஒன்று கூடினர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புகைப்படங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "கொலைகாரர்கள் நீதி வழங்க முடியுமா?" "நாங்கள் கேட்பது இழைப்பீடையே மரண சான்றிதழையோ அல்ல, முறையான நீதி விசாரணையை", "எமது உரிமை எமது எதிர்காலம் எப்போது",



"எமது உறவுகள் எங்கே" என பல வாசகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட பேரணி நகர் மணிக்கூட்டுக் கோபுர சுற்று வட்டத்தை அடைந்து காந்தி பூங்காவைச் சென்றடைந்தது. 11 மணிவரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## அரிசி ஆலைகளில் கடும் சோதனை

எம்.எஸ்.எம்.நூர்தீன்

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய, மட்டக்களப்பில் உள்ள அரிசி ஆலைகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி என்.எம்.சப்ராஸ், திங்கட்கிழமை(09) தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய, தடையின்றி, கட்டுப்பாட்டு விலையில், மக்களுக்கு அரிசி கிடைக்கும் வகையில், அரிசி ஆலைகள் கண்காணிக்கப்பட்டு வருவதுடன், அரிசி ஆலையில் இருப்பில் உள்ள நெல் மற்றும் அரிசி தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜனவரி தொடக்கம் நவம்பர் வரையில் 1800 மேற்பட்ட வர்த்தக நிலையங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டு 961 நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய, களுவாஞ்சிகுடி, மட்டக்களப்பு, ஏறாவூர், வாகரை மற்றும் வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற பிரதேசங்களில்



இச்சுற்று வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விலை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை விட, அதிக விலைக்கு விற்பனை செய்தல், இலத்திரனியல் பொருட்களுக்கு கட்டுருத்து காலம் வழங்காமை, காலாவதியான பொருட்களைக் காட்சிப்படுத்தியது மற்றும் விற்பனை செய்தமை , தர சான்றுதலுக்கு உற்படாத பொருட்களை விற்பனை செய்தமை, நிறை குறைவான பாண் விற்பனை செய்தமை, விலையை மாற்றி அமைத்தல் மற்றும் விலையை



அழித்தல் இவ்வாறான குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 9,989,000 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபரின் வழிகாட்டுதலின் கீழ் பண்டிகை காலத்தை முன்னிட்டு தற்போது மாவட்டம் முழுவதும் பண்டிகைக் கால பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் கூடிய அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மலசலகூட குழியில் தவறி விழுந்த குடும்பஸ்தர் மரணம்

பாறுக் ஷிஹான்



அம்பாறை , சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதான வீதியில் ஓடாவி வேலைக்குச் சென்ற, சாய்ந்தமருது பிரிவு 16 அஹமட் வீதியைச் சேர்ந்த அப்துல் மஜீட் மஹ்தி அஹாஸ் அஹமட் (வயது-29) என்பவர் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மலசலக்கூட குழியில் தவறி விழுந்து ஸ்தலத்தில் மரணமடைந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை(08) மாலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மரணமடைந்த இளம் குடும்பஸ்தரைக் காப்பாற்றுவதற்காக உடனடியாக செயற்பட்ட மாவடிப்பள்ளி பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய இஸ்மாயில் றிபான் என்பவர் காயமடைந்து அபாயக் குரல் எழுப்பிய நிலையில், ஏனையோரால் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் ரசீட் முஹம்மது கலீல், சடலத்தைப் பார்வையிட்டு, விசாரணை மேற்கொண்டதுடன், பின்னர் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு, சட்ட வைத்திய அதிகாரியின் மரண விசாரணை நடவடிக்கையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. குறித்த மரணத்திற்கான காரணத்தைக் கண்டறிய கொழும்பில் உள்ள பகுப்பாய்வு திணைக்களத்திற்கு சடலத்தின் சில பகுதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின்மானி வெடித்ததால் பதற்றம்

ரீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி முதலாம் குறிச்சி, ஸாவியா வீதி,ஜீ. எஸ். லேனிலுள்ள வீடொன்றில் திடீரென பாரிய சத்தத்துடன் மின்மானி வெடித்துத் தீப்பிடித்து எரிந்தமையால் அப்பிரதேசத்தில் திங்கட்கிழமை (09) இரவு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

உடனடியாக இலங்கை



மின்சார சபை காத்தான்குடி மின் அத்தியட்சகருடன் தொடர்புகொண்டு விடயத்தைத் தெரியப்படுத்தியதையடுத்து, ஸ்தலத்தலத்திற்கு விரைந்த மின்சார சபை ஊழியர்கள் தீ ஏனைய இடங்களிலும் பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

மேலும் உடனடியாக மின்சார சபை ஊழியர்களை ஸ்தலத்தலத்திற்கு அனுப்பி தீ பரவாமல் தடுத்தமைக்காக குறித்த மின்சார சபை அதிகாரிக்கு மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

## போதையில் வந்த கான்ஸ்டபிளால் சார்ஜெண்டின் உதட்டில் காயம்

அம்பிலிப்பிட்டிய ஜனாதிபதி பாடசாலையில் நடைபெற்று வரும் உயர்தர பரீட்சைகளுக்கான கடமைகளுக்கு நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மதுபோதையில் வந்து பொலிஸ் சார்ஜென்ட் ஒருவரை தாக்கிய சம்பவம் திங்கட்கிழமை (09) இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் அம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் தாக்குதலுக்குள்ளான பொலிஸ் சார்ஜன்ட் , மேல் உதடு காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கடமையேற்பு


அபு அலா

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து, கட்டிடங்கள் மற்றும் நிர்மாண, வீடமைப்பு, கிராமிய மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் எம்.எம்.நஸீர் தனது கடமைகளை திங்கட்கிழமை (09) பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, கடந்த 06ஆம் திகதி மாகாண அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்களை நியமித்து அவர்களுக்கு கடிதங்களையும் வழங்கி வைத்தார்.

இதன்போது, இலங்கை நிர்வாக சேவையில் விசேட தரத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியான எம்.எம்.நஸீருக்கு வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கான கடிதத்தை வழங்கி வைத்தார்.

கடைமையேற்கும் நிகழ்வில் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள்




என பலரும் கலந்து கொண்டதுடன், கல்முனை பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த ஜே.லியாக்கத் அலி கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும் கடமை பொறுப்பேற்றுக்கொண்டார்.

## அமெரிக்க செல்லவிருந்தவர் ரயில் விபத்தில் பலி

கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ரயிலில், மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரு இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொரு இளைஞன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிலாபம், வட்டக்கல்லிய பகுதியைச் சேர்ந்த தினுக ஸஷேந்திர பெரேரா என்ற 18 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்த இளைஞனின் பெற்றோர் மற்றும் இளைய சகோதரர்கள் இருவர் சில மாதங்களுக்கு முன்னர்



அமெரிக்காவுக்குச் சென்றுள்ளதுடன், குறித்த இளைஞனுக்குத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அவர்களுடன் அழைத்துச் செல்ல முடியாமல் போனதாகவும் அந்த பிரச்சினைகள் திருத்தப்பட்ட பின்னர் அவர் அமெரிக்கா செல்ல தயாராக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

விபத்தில் படுகாயமடைந்து, தற்போது சிலாபம் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் 20 வயதுடைய இளைஞன் தொழில் நிமித்தமாக வெளிநாடு செல்ல தயாராகி வருவதாகவும், உரிய ஆவணங்களைத் தயாரித்து, விசா கிடைக்கும் வரை காத்திருந்துள்ளார்.

# வன விலங்குகளை மட்டுமே குறை சொல்வதில் அர்த்தமில்லை

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரிசி, தேங்காய் கட்டுப்பாடுகளுக்கு, பல விலங்குகளைப் பலரும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்நிலையில், பாராளுமன்றத்தில் உரையாற்றிய கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த, “குரங்குகளின் பயங்கரவாதம்” என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நாட்டின் விவசாயத்தைக் குரங்குகள் மட்டுமன்றி, மர அணில்கள், மயில்கள், முள்ளம் கோழிகள், காட்டு யானைகள் உள்ளிட்டவையும், இன்னும் சில பூச்சுகளும், வெட்டுக்கிளிகளும், பயிர்களையும், பழங்களையும் மற்றும் விளை நிலங்களையும் கடுமையான சேதத்துக்கு உள்ளாக்கி விடுகின்றன.

விளை நிலங்களுக்குள் புகுந்து அட்டகாசம் செய்யும் இந்த விலங்குகள் விவசாய நிலங்களை நாசம் செய்து, அதில் உள்ள விவசாயம் மற்றும் மரக்கறிகள் பழங்கள் என்பவற்றை உண்கின்றன.

இறுதியில், மக்கள் அரிசிக்குப் பதிலாக மற்றொரு உணவைத் தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தேங்காய்க்குப் பதிலாக எதைத் தேடுவது என்பது தொடர்பில் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட வகை விதையை நட்டவுடன் மயில்கள் படையெடுத்து வந்து, விதைகளை உண்ணும். காட்டுப் பன்றிகளின் தொல்லை கொஞ்ச நஞ்சமல்ல. காட்டுப்பன்றி எந்த பயிரையும் செரித்துவிடும். கிரானைட் மற்றும் இரும்பு மட்டுமே இந்த விலங்குக்கு ஜீரணிக்க முடியாது.

உணவு தட்டுப்பாட்டுக்கு விலங்குகளை மட்டுமே குறை கூறுவதில் அர்த்தமில்லை. அதிகரித்து வரும் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் உற்பத்தித் திறன் மிகவும் குறைவாக உள்ளது.

அாத்துடன், விவசாய உற்பத்திகளை அறுவடை செய்வதற்கான காலம் எட்டிய போதிலும், உரிய வகையில் உரம் கிடைக்காமையினால், விவசாய உற்பத்திகள் உரிய வகையில் அறுவடை செய்யப்படவில்லை.

இது தற்போது மட்டுமன்றி, எதிர்காலத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

வனவிலங்குகள் காட்டில் இருந்து மனிதர்கள் வசிக்கும் இடங்களுக்கு வந்து பயிர்களை உண்பது ஏன்? இதற்குக் காரணம் இந்நாட்டின் வனம் மிக வேகமாகக் குறைந்து வருவதேயாகும். மர கடத்தல் காரர்கள் காட்டில் உள்ள மரங்களை வெட்டி விற்கின்றனர். அந்த வெறுமையான நிலத்தில் காட்டு விலங்குகளுக்கு உண்பதற்கு எதுவும் இல்லை. இதனால் வன விலங்குகள் கிராமங்களில் வசிக்கின்றன.

இந்த நாட்டில் விலங்குகளைக் கொல்ல முடியாது. நிலத்திற்கு வரும் பிராணியை வேறு நிலத்திற்குச் சென்று மரத்தின் இலைகளை உண்ணச் சொன்னாலும் அந்த விலங்குக்கு அது புரியாது. இதைத் தோட்டத்திற்கு வரும் காட்டு யானையிடம் கூறினால் அது விவசாயியைப் பிடித்து அடித்துக் கொன்று விடும். இதன் காரணமாக, பயிர்களை அழிக்கும் வன விலங்குகளை விவசாயிகள் கொல்லத் தொடங்கினால், விலங்கு உரிமை அமைப்புகள் நடவடிக்கை எடுக்கும்.

எனவே, வனவிலங்கு அலுவலர்கள் விவசாயிகளுடன் இணைந்து இந்தச் சூழலைச் சமாளிக்க வேண்டும்.

ஆனால் அதைச் செய்வதற்கு போதுமான வனவிலங்கு அதிகாரிகள் இந்நாட்டில் இல்லை. அதன்படி, பயிர் சேதத்திற்கான தீர்வுகளை மறுசீரமைப்பதற்கான முதல் கட்டமாக, வனவிலங்கு அலுவலர்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## நிரந்தரத் தீர்வு இருக்கட்டும்,
# மாகாண சபைத் தேர்தலையாவது நடத்துங்கள்



எம்.எஸ்.எம்.ஐயூப்

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் ஆகியவற்றுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு அளித்த பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று பல்வேறு தரப்பினர் அரசாங்கத்துக்கு இப்போது அழுத்தம் கொடுத்து வருகின்றனர். அதில் ஒன்று, மின்சார மற்றும் எண்ணெய் விலையைக் குறைக்க வேண்டும் என்பதாகும். இதனிடையே அரிசி, தேங்காய் போன்ற பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது. அதையும் எதிர்க்கட்சிகள் தமக்கு சாதகமாக்கிக் கொண்டுள்ளனர்.

போதாக்குறைக்கு அண்மையில் கடும் மழை பெய்து நாடெங்கிலும் விவசாயம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதன் தாக்கமும் விரைவில் காணக்கூடியதாக இருக்கும்.

அத்தோடு, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்றும் வாக்குறுதியளித்ததைப் போல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்ய வேண்டும் என்றும் கடந்த ஜனவரியில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்றும் பலர் வலியுறுத்தி வருகின்றனர்.

இதனிடையே தமிழ் மக்களும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். சிலர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை நிர்வாக ரீதியாக மீண்டும் இணைக்க வேண்டும் என்கின்றனர். சிலர் சமஷ்டி முறையைக் கொண்டு வர வேண்டும் என்று கூறுகின்றர். அதேவேளை மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்றும் சிலர் கோருகின்றனர்.

மாகாண சபை முறை பற்றிய புதிய சர்ச்சையொன்றும் இதனிடையே உருவாகியிருக்கிறது. 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் இரத்துச் செய்யப்படும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா கூறியதாகத் தமிழ் பத்திரிகையொன்றில் வெளியான செய்தியை அடுத்தே இந்த சர்ச்சை உருவாகியிருக்கிறது.

கடந்த வாரம் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை சந்தித்த தமிழ் தலைவர்களும் டில்வின் சில்வா கூறியதாகக் கூறப்படும் அக்கருத்தைப் பற்றி வினவியுள்ளனர். 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்யும் நிலைப்பாட்டில் தமது கட்சியோ அரசாங்கமோ இல்லை என்பதே ஜனாதிபதியின் பதிலாக இருந்தது.

அண்மையில் டில்வின் சில்வா, தமிழ் பத்திரிகைக்கு கொடுத்த நேர்காணல் ஒன்றில், புதிய அரசியலமைப்பொன்றில் மூலம் இனப் பிரச்சினைக்கு புதிய தீர்வொன்றை முன்வைக்காது 13 ஆவது அரசியலமைப்போ மாகாண சபை முறையோ ஒழிக்கப்படாது என்று நான்கு இடங்களில் கூறியிருந்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களில் எவராவது மாகாண சபைகளை இரத்துச் செய்வதென்று கூறியதாக ஏதாவது பத்திரிகையில் வெளிவந்தால் அல்லது எவராவது கூறினால் பெரும்பாலானவர்கள் அதனை நம்பவே செய்வார்கள். காரணம் 1987இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது முதல் அவ்வொப்பந்தத்தையும் அதன் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட 13ஆவது அரசியலமைப்பத் திருத்தத்தையும் அத்திருத்தத்தின் கீழ், உருவாக்கப்பட்ட மாகாண சபைகளையும் அக்கட்சியினர் எதிர்த்து வந்தமையேயாகும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட 1987 ஜூலை 29ஆம் திகதி அப்போதைய இந்திய பிரதமர் ராஜிவ் காந்தி இலங்கைக்கு வந்த போது மக்கள் விடுதலை முன்னணியினரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினரும் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

இதன்போதும் வெளி மாவட்டங்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போதும் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 147 பேர் கொல்லப்பட்டனர்.

பிற்காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியினர் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்ட போதிலும் மாகாண சபைகள் நாட்டுப் பிரிவினைக்குக் காரணமாகும் பொறிமுறை என்ற நிலைப்பாட்டை அவர்கள் கைவிடவில்லை.

2019 மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் மேலும் 20 அமைப்புக்கள் இணைந்து தேசிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது. இப்புதிய அமைப்பு கருத்தியல் ரீதியாக மிகவும் நெருங்கிய எனினும் சில வேறுபாடுகளைக் கொண்ட அமைப்புக்களின் ஒன்றியமாகும்.

அவ்வமைப்புக்களில் பல மாகாண சபைகளை ஏற்றுக்கொண்டவையாகும். அவர்களின் கருத்தியல் தாக்கத்தோடு தாம் நாட்டில் ஆட்சியாளர்களாகத் தெரிவு செய்யப்படலாம் என்று கடந்த வருடம் மக்கள் விடுதலை முன்னணியினர் உணரவே மாகாண சழபகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக தமது நிலைப்பாடுகளை அவர்கள் மாற்றிக்கொண்டனர்.

இந்த மாற்றத்தை மக்கள் விடுதலை முன்னணியினதும் தேசிய மக்கள் சக்தியினதும் தலைவரான அனுரகுமார திசாநாயக்கவே முதன்முதலில் பகிரங்க மேடையில் தெரிவித்தார். கடந்த வருடம் ஜூன் மாதம் அவர் லண்டனில் கூட்டமொன்றில் உரையாற்றும் போது, மாகாண சபைகளைப் பற்றி இலங்கையர் ஒருவர் கேள்வியொன்றை எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அனுர, மாகாண சபைகளைப் பற்றிய தமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை, ஆயினும், மாகாண சபைகள் தமது உரிமை என்று தமிழ் மக்கள் கருதுவதால் அம்மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்றுத் தீர்வொன்றை முன்வைக்காமல், அவற்றை ஒழிக்கப் போவதில்லை என்றார். இதனை அவர் அதன் பின்னரும் பல இடங்களில் கூறினார். ஆயினும், அவரது கருத்து தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக சென்றடையவில்லை. அதனாலேயே டில்வின் சில்வாவின் கூற்று சர்ச்சையாகியிருக்கிறது.

மக்கள் விடுதலை முன்னணியானது சமூக மாற்றத்துக்காக நீண்ட காலமாக தமது வாழ்க்கையை அர்ப்பணித்த பெருந்திரளானோரை உள்ளடக்கிய அமைப்பாகும். இவர்களிடையே ஆங்காங்கே வேறு நோக்கங்களைக் கொண்டவர்கள் இருக்கலாம். ஆனால், பெரும்பாலானவர்கள் மாற்றத்தை நோக்கமாகக் கொண்டவர்களாவர் என்றே தெரிகிறது. எனவே, அக்கட்சியானது இனப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்றும் ஊகிக்கலாம்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. அதற்கான தடைகள் பெரும்பான்மை சமூகத்துக்குள் மட்டுமல்லாது தமிழ் மக்களுக்குள்ளும் இருக்கின்றன. குறிப்பாக இரு சமூகங்களிலும் உள்ள பல்வேறு அரசியல் குழுக்களிடையே இருக்கும் போட்டி மனப்பான்மை தீர்வுக்கான பிரதான எதிரியாகக் கருதலாம்.

நாம் இதற்கு முன்னர் பல கட்டுரைகளில் சுட்டிக் காட்டியது போல் இப்பிரச்சினையைத் தீர்ப்பதாயின் இரு சமூகங்களுக்கிடையில் தீர்வொன்று தொடர்பாக இணக்கம் ஏற்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட ஒரு சாராரோ அல்லது இரு சாராருமோ விட்டுக்கொடுத்து இறங்கி வந்தால் மட்டுமே இணக்கம் ஏற்படும். தாம் அல்ல, மற்றவரே விட்டுக்கொடுக்க வேண்டும் மற்றவரே இறங்கி வர வேண்டும் என்று கருதினால் பிரச்சினை ஒருபோதும் தீரப் போவதில்லை. இதுவரை காலமும் அதுவே நடந்தது.

புதிய அரசியலமைப்பொன்றின் மூலமே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதாகவும் மூன்றாண்டுகளுக்குப் பின்னரே புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படும் என்றும் அரசாங்கம் கூறுகிறது. அதாவது தீர்வொன்று வருவதாக இருந்தால், அதற்கு மூன்றாண்டுகள் செல்லும், அதேவேளை, தமிழ் மற்றும் சிங்கள அரசியல்வாதிகள் மத்தியிலும் உள்ள போட்டியின் காரணமாக அந்தத் தீர்வும் கிடைக்குமா என்ற சந்தேகமும் நிலவுகிறது.

இனப் பிரச்சினை தொடர்பாக 1950களுக்குப் பின்னர் 1980 களிலேயே பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. 1984இல் வட்டமேசை மாநாட்டிலிருந்து இது வரை நூற்றுக்கணக்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன.

ஆயினும், தீர்வு என்று ஏதாவது கிடைத்திருந்தால், அது 1987இல் இந்தியா, இலங்கை மீது இராஜதந்திர பலாத்காரத்தைப் பாவித்துத் திணித்த மாகாண சபை முறை மட்டுமேயாகும். அதற்காகவும் அது வரை தமிழ்ச் சமூகம் ஆயிரக்கணக்கில் இல்லாவிட்டால், நூற்றுக் கணக்கில் உயிர்களைத் தியாகம் செய்திருந்தது. எனவே, தமிழர்கள் அதனை இழக்க முடியாது.

கடந்த வாரம் தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறியதைப் போல், ஆகாயத்தில் பறக்கும் பறவைக்காகக் கையில் இருக்கும் பறவையை இழக்கக் கூடாது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த விடயத்தில் என்ன செய்யப் போகிறதா தெரியாது.

ஆனால், இதுவரை இருந்த ஆட்சியாளர்கள் மாகாண சபைகளைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக தமது கட்சி உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு அரசியல் களத்தைப் பழக்குவதற்காகவே அச்சபைகளைப் பயன்படுத்தினர்.

மாகாண சபைகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய ஐ.தே.க. இந்த விடயத்தில் மிக மோசமாக நடந்து கொண்டுள்ளது. அக்கட்சி தேர்தல்களுக்குப் பயந்து 2017இல் மாகாண சபைகளை முடக்க எடுத்த நடவடிக்கையால் அச்சபைகள் நிரந்தரமாகவே முடங்கிப் போயுள்ளன. அக்கட்சி ஏனைய கட்சித் தலைவர்களோடு கலந்துரையாடாமல் மாகாண சபைத் தேர்தல்களுக்காகவும் கலப்புத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்தி அதன் கீழ் சர்ச்சைக்குரிய எல்லை நிர்ணய அறிக்கையொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனைத் தாமே தோற்கடித்து அத் தேர்தல்களை நடத்த முடியாமற் செய்தது. அன்றிலிருந்து ஏழாண்டுகளுக்கு மேலாக மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவில்லை.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பித்த திருத்தச் சட்ட மூலத்துக்கு உயர் நீதிமன்றம் ஒப்புதல் வழங்கிய போதிலும் அதனை நிறைவேற்ற ஐ.தே.க. தலைவரான ஜனாதிபதி ரனில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே மூன்றாண்டுகளுக்குப் பின்னர் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இனப் பிரச்சினையை தீர்க்கிறதோ இல்லையோ மாகாண சபைத் தேர்தல்களை நடத்த விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்வபர்களேயே சமூகம் விரும்புகின்றது.

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப்போய் விடுவார்கள்.

நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனோ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியை செப்பனிட்டு தரவும்

பொத்துவில் -ரொட்டை மீள் குடியேற்றக் கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறித்த கிராமத்தில், ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தினால் இந்த வீடுகள் அமைக்கப்பட்டு, இம்மக்களின் போக்குவரத்திற்காக வீதிகளும் அமைக்கப்பட்டுக் கடந்த 2006இல் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

குடியேற்றப்பட்டதிலிருந்து கடந்த 10 வருடத்திற்கும் மேலாகக் குறித்த வீதியானது உடைந்து சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுவதால், பொது மக்கள் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

ரொட்டை மீள் குடியேற்றக் கிராமத்தில் 347 குடும்பங்கள் வாழ்ந்து வருவதோடு, ரொட்டை, ஜெய்க்கா ஆகிய கிராமங்களுக்கு மற்றும் தாரம்பளை விவசாயக் காணிகளுக்குச் செல்லும் விவசாயிகள் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகக் குறித்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர். இதேவேளை, தேர்தல் காலங்களில் இம்மக்களின் அடிப்படைத் தேவைகளை முன் வைத்து அரசியல் செய்யும் மக்கள் பிரதிநிதிகள் தேர்தல் முடிந்த பின் இம்மக்களையும் இக் கிராமத்தையும் கைவிடுவதாகச் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வாறு கவனிப்பாரற்று ஒதுக்கப்பட்டு வாழும் இந்த மக்களின் நன்மை போக்குவரத்திற்காகக் குறித்த வீதியை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

– எம்.எஸ்.எம்.ஹனீபா



# மனித உரிமைகளும் பொறுப்புக்களும்

கந்தசாமி அபிலாஷ்

வளர்ந்து வரும் இன்றைய தொழிநுட்ப உலகில் காலத்திற்கு காலம், நிமிடத்துக்கு நிமிடம், செக்கனுக்கு செக்கன் மாற்றங்கள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதுடன், சமூக, அரசியல், கலாசார பொருளாதார விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ரீதியாகத் துரித கதியில் மனித வாழ்க்கையின் இருப்பினை உறுதிசெய்து கொள்ளும் வகையில் இன்றைய சிந்தனையில் மனித உரிமைகளும் அதனுடன் இணைந்த மனித பொறுப்புக்களும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத வகையில் அமைவதுடன் காலத்தின் தேவைக்கேற்ப முக்கியத்துவமும், முன்னேற்றகரமான மனித வாழ்வின் தன் மானம், உயிர்வாழ்தல் அடிப்படையில் மனித வாழ்க்கையில் உரிமைகளின் தாற்பரியமும் உணரப்பட்டு வருகின்றது.

ஒரு நாணயத்தின் இருபக்கம் போல் மனித உரிமைகளும், மனித பொறுப்புக்களும் ஒன்றுடனொன்று நெருக்கமான தொடர்பினை கொண்டிருக்கின்றது. இயற்கையாகப் பிறந்த ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்தில் சுதந்திரமாக வாழ்வதற்குக் கடமைப்பட்டுள்ளதுடன், மனிதனின் இருப்பிற்கு அவசியமான உரிமைகள் மனித உரிமைகள் எனப்படுகின்றது. மனித உரிமைகள் உலகளாவிய ரீதியில் பல்வேறு வகையான உரிமைகள் இனங்காணப்பட்டுள்ளது. பொதுவாக உரிமைகள் என்பது சமூகத்தாலும், அரசினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இறுதியாக நடைமுறைப்படுத்தப்படும் மனித கோரிக்கைகள் ஆகும்.

உலகில் இடம்பெற்ற மாபெரும் யுத்தங்களான 1ஆம் உலக மகா யுத்தம்(1914-1918) உலக மக்களைக் கதிகலங்கச் செய்ததுடன், அதன் பின்னரான வர்சேல்ஸ் உடன்படிக்கையின் வாயிலான தோற்றம் பெற்ற சர்வதேச சங்கத்தின் வீழ்ச்சியினைத் தொடர்ந்து இடம்பெற்ற 2ஆம் உலகமகா யுத்தம் (1939-1945) காரணமாக ஏற்பட்ட இழப்பினைத் தொடர்ந்து உலகில் 3ஆம் உலகப்போருக்கான சூழ்நிலைகள் தோன்றுவதைத் தடுக்கும் வகையிலும், உலக சமாதானத்தினை வலியுறுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை 1945ஆம் ஆண்டு ஐப்பசி 24ஆம் திகதி தோற்றம் பெற்றது. அதன் பின்னராக மூன்று வருட காலப்பகுதியில் இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியில் 1948 டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபை, மனித உரிமைகள் பற்றி பிரகடனத்தை வெளியிட்டது.

அந்தவகையில், 2024ஆம் ஆண்டிற்கான மனித உரிமைகள் தினத்தின் கருப்பொருள் “Our rights, our future, rights now” என்பதாகும். ஐக்கிய நாடுகள் சபையானது உலக நாடுகளில் உள்ள மக்களின் சமாதானம், தேசிய நல்லுறவு, தேசிய ஒற்றுமை ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் எமது உரிமைகள், எமது எதிர்காலம், இப்போது உரிமைகள் என விமர்சனரீதியாக எதிர்கால வாழ்க்கைக்கான அடித்தளத்தை பொதுமக்கள் வேண்டி நிற்கின்றனர். சுதந்திரமாகப் பிறந்த ஒவ்வொரு மனிதனும் உரிமைகளை அனுபவித்து வாழ்வது அவனது கடமையாகும். அக்கடமைக்கான அச்சுறுத்தல்களை அகற்றி தேசிய நல்லுறவை வலுப்படுத்துவதே சுதந்திர அரசியல் யாப்புக்களைக் கொண்ட ஒவ்வொரு ஒவ்வொரு நாட்டினதும் பொறுப்புக்களாகும்.

மனித உரிமைகள் சில நாடுகளில் வரையறுக்கப்பட்டு அரசியல் யாப்புக்களில் பொறிக்கப்பட்டு அடிப்படை உரிமைகளாக பாதுகாக்கப்பட்டு உலக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கீழ் சில அமைப்புக்களாலும், நிறுவனங்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தநாளில் எவ்வித வேறுபாடுமில்லாத வகையில் எல்லாப் பாடசாலைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் மனித உரிமை தொடர்பான பதாதைகளை காட்சிக்கு வைக்கவும், கொள்கைகளைப் பரப்பவும், எல்லா சுதந்திர மனிதர்களைச் சிந்திக்கத் தூண்டி உயிர்வாழும் நிலையைப் பலப்படுத்தும் வகையில் உரிமைகளைப் பெறத் தூண்டவும் அங்கத்துவ நாடுகள் செயற்படுகின்றன.

சிறுவர் முதல் பெரியோர் வரை ஒவ்வொருவரும் மனித உரிமைப் பிரகடனத்திலுள்ள 30 உறுப்புரைகளில் முக்கியமானவற்றை அறிந்திருக்க வேண்டும். அந்தவகையில், உறுப்புரை1- சுதந்திரமாகப் பிறந்த அனைவரும் சமனானவர்கள், உறுப்புரை2 - இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் போன்ற வேறுபாடு கிடையாது, உறுப்புரை 3- உயிர்வாழும் உரிமை, உறுப்புரை4 -அடிமை நிலையில் இருந்து விடுபடும் உரிமை, உறுப்புரை5- சித்திரவதையிலிருந்து விடுபடும் உரிமை, உறுப்புரை7- எல்லோரும் சட்டத்தின் முன் சமனானவர்கள், உறுப்புரை8- அடிப்படை உரிமை மீறல்களுக்கு எதிரான தேசிய நியாயம் பெறும் உரிமை, உறுப்புரை11- குற்றஞ்சாட்டப்படும் எல்லோரும் பகிரங்க விளக்கத்தில் சட்டத்திற்கிணங்க சுற்றவாளியாக கருதப்பட வேண்டும், உறுப்புரை13- ஒவ்வொரு நாட்டின் எல்லைக்குள் சுதந்திரமாக பிரயாணம் செய்வதற்கும் வசிப்பதற்கும் உரிமையுண்டு, உறுப்புரை15- ஒரு தேசிய இனத்தவராக இருக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், உறுப்புரை16- திருமணம் செய்வதற்கான உரிமை, உறுப்புரை17- சொத்துரிமை, உறுப்புரை18- சிந்தனை சுதந்திரம்திரம், மனசாட்சிச் சுதந்திரம், மத சுதந்திரம் என்பவற்றை வெளிப்படுத்தும் உரிமை, உறுப்புரை19-பேச்சுச் சுதந்திரம், உறுப்புரை20- சமாதான முறையில் ஒன்று கூடுவதற்கான உரிமை,

உறுப்புரை21- பிரதிநிதிகள் மூலமாகவும் பங்கு பெறும் உரிமை, உறுப்புரை22- சமூகப் பாதுகாப்பு உரிமை, உறுப்புரை23- தொழிலுக்கேற்ற சம்பளம் பெறும் உரிமை, உறுப்புரை24- இளைப்பாறுகைக்கும், ஓய்விற்கும், சமகால விடுமுறைக்குமான உரிமை, உறுப்புரை25 -சமூகத் தேவைகளுக்கும் குடும்ப நல்வாழ்வு, வாழ்க்கைத்தரத்திற்கான உரிமை, உறுப்புரை26 -கல்வி கற்பதற்கான உரிமை, உறுப்புரை27-கலைகளைக் கற்றல், அறிவியல் முன்னேற்றம் பற்றியும் அறிந்திருக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

மனித உரிமைகள் ஆணையகத்தின் அறிக்கை- 2024இல், சில பிற்போக்கான அரசாங்கக் கொள்கைகள், போதிய சமூகப் பாதுகாப்பின்மை காரணமாக நாட்டின் பொருளாதார நெருக்கடியானது இலங்கையர்களை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது என சுட்டிக்காட்டியுள்ளது. எவ்வாறாயினும், அரசாங்கம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார நிலைமை மனித உரிமைகளை குறை மதிப்பிற்கு உட்படுத்தியது. இலங்கை மக்கள்தொகையில் 17 வீதத்திற்க்கும் அதிகமானோர் உணவுப் பாதுகாப்பற்றவர்கள்,

மனிதாபிமான உதவி தேவைப்படுபவர்கள், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 31 வீதம் பேர் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளவர்கள் எனவும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1983-2009 உள்நாட்டுப் போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில், கடந்த கால மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பங்கள், பொறுப்புக் கூறலுக்காக பிரசாரம் செய்த ஆர்வலர்கள் காவல்துறை மற்றும் புலனாய்வு அமைப்புகளின் கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகினர்.

ஒவ்வொரு மனிதர்களது வாழ்வை பூரணப்படுத்தும் வகிபங்கினை ஆற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் பல இலங்கையில் காணப்படுகின்றன. அந்த வகையில், சர்வதேச அளவிலான ஏற்பாடுகளாக ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்த வகையில், சமவாயங்கள், பிரகடனங்கள், உடன்படிக்கைகள் என்பனவும் சர்வதேச மன்னிப்பு சபை, சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தில் 30 உறுப்புரைகளின் கீழான ஏற்பாடுகள், நல்லாட்சியை முன்னெடுக்கும் தேசிய ரீதியில் நாடுகளுக்கிடையில் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளாக அடிப்படை உரிமைகளை அரசியலமைப்பு யாப்பில் பொறித்தல், மனித உரிமைகள் ஆணைக்குழு, குறைகேள் அதிகாரி, பொலிஸ், ஐக்கிய நாடுகள் சபையின் துணை தாபனங்கள், அரசியல் கட்சிகள், அமுக்கக்குழுக்கள், வெகுஜன ஊடகங்கள், சிவில் அமைப்புக்கள், பகிரங்க ஆணைக்குழுக்கள் என்பன காணப்படுகின்றன.


எனினும், சமூகப் பல்லினத்தன்மை கொண்ட நாடுகளில் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் முரண்பட்ட நிலையில், எதிர்மறையான பிரதிபலிப்பினைக் காண முடிகிறது. கடந்த கால விளைவுகளின் படி அரசாங்கத்தின் நிர்வாகச் சிக்கல்கள், இன, மத, சாதி ரீதியாகப் பிளவுபட்ட அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் மற்றும் அரசியல்வாதிகளின் பிற்போக்கான செயற்பாடுகள், உப சட்டங்கள், யாப்புத் திருத்தங்கள் என்பன மனித உரிமைகளையும், அதனுடன் இணைந்த மனித பொறுப்புக்களையும் நடைமுறைப்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்தி வருகின்றன. அதனை விட பயங்கரவாத சட்டம், அவசரகால சட்டம் (1979) பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தடையாக உள்ளன. நாட்டில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளான காலநிலை மாற்றம், வெள்ளப்பெருக்கு,

உலகைக் கதிகலங்கச் செய்த சுனாமிப் பேரலை, கொவிட்-19, பாரிய நோய்கள், யுத்தங்கள் காரணமாகப் பல இலட்சம் உயிர்கள் பறிபோயின. உறவுகளை இழந்து துன்பங்களை மட்டுமே அனுபவித்துக் கொண்டிருக்கும் குடும்பங்கள் ஏராளம்.

இனிவரும் காலங்களில் புதிய மாற்றங்களை தொழில்நுட்ப வளர்ச்சியின் விந்தைக்கு அடிமையாகும் சமுதாயத்தைத் தடுப்பது மட்டுமின்றி பாலர் முதல் பல்கலைலைக்கழங்கள் வரையில் மனித உரிமைகள் தொடர்பிலான விழிப்புணர்வு வலுப்பெற வேண்டியது காலத்தின் தேவையாகும். எனவே, இவ்வுலகில் பிறந்த அனைவரும் சமனானவர்கள். இயற்கையாகப் பிறந்த ஒவ்வொரு மனிதர்களும் இயல்பான வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கும், இனம், மதம், அந்தஸ்து முதலான வேறுபாடுகளைக் களைந்து சமூகத்தில் தனக்கென நிலையானதொரு இடத்தினை நிலைநிறுத்திக் கொள்வதற்கும், அடிப்படை உரிமைகளும், உரிமைகளை நியாயப்படுத்திக் கொள்ளும் வகையில் தனிமனிதர்களினதும், அரசாங்கத்தினதும் மனித பொறுப்புக்களும், மனித வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தினை, மாறும் கால நியதியுடனான சர்வதேச மனித அரங்கில் வலுப்பெற வேண்டியது காலத்தின் நியதியாகும் என்பதில் எத்தகைய ஐயமுமில்லை.



# மருத்துவத் துறையின் முன்னேற்றமும் புதிய வாய்ப்புகளும்



அ.அஸீஸ் அஸ்மா,
ஊடக கற்கை துறை,
இரண்டாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

மருத்துவம் என்பது ஒரே வகை திறன்கள், அறிவியல் முன்னேற்றம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றின் ஒருங்கிணைந்த செயல்பாடு. மனித உடலைப் பற்றி விளக்கங்களை உருவாக்குவதோடு, அவை வண்ணத்தில் வேறு வேறு சிகிச்சைகள் மற்றும் நவீன மருந்துகளை உருவாக்குகின்றன. இன்றைய காலத்தில், மருத்துவத் துறை பலவகையான சவால்களை எதிர்கொண்டு முன்னேற்றத்தை அடைந்து வருகிறது. இந்த கட்டுரையில், புதிய கண்டுபிடிப்புகள், சவால்கள் மற்றும் அதன் சமூக வாழ்வில் ஏற்படுத்திய மாற்றங்களை விவரிப்போம்.

## நவீன மருத்துவ தொழில்நுட்பங்கள்

விளக்கமளிக்கும் நவீன மருத்துவ சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் மருத்துவத் துறையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உதாரணமாக, ரோபோ-அறுவைசிகிச்சை என்பது மானுட தவறுகளைக் குறைத்து, மிகவும் குறைந்த நேரத்தில் அறுவைசிகிச்சை செய்ய உதவுகிறது. இதன் மூலம் நோயாளிகளுக்கு வேகமாகக் கோபப்பட்டு, அவர்களின் முழு எதிர்பார்ப்பு எளிதாக நிறைவேறுகிறது.

## தொலைநோக்கு மருத்துவம் (Telemedicine)

தொலைநோக்கு மருத்துவம் உலகளாவிய அளவில் பெரும் முன்னேற்றங்களை அடைந்துள்ளது. பொதுவாக, தொலைபேசி அல்லது வீடியோ காட்சி மூலம், மருத்துவர்கள், பல நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்கள் தொலைவிலிருந்தும், நோயாளிகளுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்குகின்றனர். இதன் உதாரணமாக, இந்தியா போன்ற நாட்டில், கிராமப்புற பகுதிகளில் உள்ள மக்கள் தொலைபேசியில் மருத்துவ சேவைகளை எளிதாகப் பெறுகின்றனர். இது, மக்கள் தொடர்புகளை அதிகரித்து, பிரச்சினைகளை சரிசெய்ய உதவுகிறது.

## புதிய நோய்கள் மற்றும் தடுப்பு சிகிச்சைகள்

உலகில் புதிய நோய்கள் தொடர்ந்து பரவி வருவதைத் தடுத்து நிறுத்துவதற்கு, மருத்துவ அறிவியல் புதுப்பிக்கப்படுவது அவசியமாகின்றது. குறிப்பாக, COVID-19 போன்ற தொற்றுநோய் உலகை ஆட்டிப்படுத்தியுள்ளன. இந்த நோயின் பரவலுக்குத் தடுப்பாக, விரைவான மருந்து மற்றும் தடுப்பு சிகிச்சைகள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும், வாக்சினேஷன் என்பது ஒரு முக்கிய முறையாக விளங்கியது, இதனால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

## புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் சிகிச்சைகள்

புற்றுநோய், இன்று ஒரு பெரிய சவாலாக மாறியுள்ளது. ஆனால், புதிய மருத்துவ ஆராய்ச்சிகளும், ஜெனோமிக்ஸ் போன்ற தொழில்நுட்பங்களும் புற்றுநோய் சிகிச்சைகளை முன்னேற்றியுள்ளன. கிமோதெரபி, ரேடியோதிரபி, கார்டியோதிரபி போன்றவை புற்றுநோயின் மேல் முக்கியமான சிகிச்சைகள் ஆகும். தற்போது, ஸ்மார்ட் மருந்துகள் மற்றும் புற்றுநோய் குணப்படுத்தலுக்கான புதிய முயற்சிகள், நோயாளிகளின் வாழ்நாள் நீட்டிக்கவும், அவர்களது ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன.

## மருந்துகளின் வியாபார பரிமாற்றம்

மருந்துகள் உலகளாவிய பரிமாற்றத்துடன், குறைந்த விலையில் கிடைக்கும் என்றும், ஆபத்தான நோய்களைத் தடுக்கும் வகையில் மருந்துகள் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளன. குறிப்பாக, உலகின் பல பகுதிகளுக்கும் மருந்துகள் பரிமாற்றம் செய்யப்பட்டு, நோய்கள் விரைவாக குணப்படுத்தப்படுகின்றன.

## உலகளாவிய மருத்துவ சேவைகள் மற்றும் அதன் பொருளாதார தாக்கம்

மருத்துவ சேவைகள் மற்றும் பராமரிப்பில் உலகளாவிய பரிமாற்றம் அதிகரித்துள்ளது. உலகின் பல பகுதிகளில் மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சைகள் இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வழங்கப்படுகின்றன. அதனால், நாடுகள் தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடுவதற்கான புதிய வாய்ப்புகளை உருவாக்குகின்றன. உதாரணமாக, இந்தியா, மருத்துவ சுற்றுலாத் துறையில் (Medical Tourism) முன்னணி நாடாக விளங்குகிறது. வெளிநாட்டு நோயாளர்கள் இந்தியாவில் சிகிச்சை பெறுவதற்காக வருகின்றனர், இதன் மூலம் அந்த நாட்டின் பொருளாதாரம் மற்றும் மருத்துவத் துறை வளர்கின்றது.

**வயதானவர்களுக்கு, அவற்றின் உடல் நிலைகள் மற்றும் நோய்களின் பராமரிப்பு, குறிப்பாக நோய்கள் பரவாமல் காக்கும் விதமாக மருத்துவர்கள் சிறப்பு முறைகளை உருவாக்குகின்றனர்**

**மருத்துவத் துறை குறித்த விழிப்புணர்வு, நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, நோய்கள், உடல்நிலை பிரச்சினைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது**

## மரபணு மருத்துவம் (Gene Therapy)

மரபணு மருத்துவம் என்பது மரபணுக்களில் ஏற்படும் பிழைகளைக் கையாளும் புதிய முறையாகும். இது நவீன மருத்துவத்தில் ஒரு முக்கிய முன்னேற்றமாக உள்ளது. மரபணு சிகிச்சை மூலம் மரபணுக்கள் தெரிவு செய்யப்பட்ட நோய்களை நிவர்த்தி செய்யவும், சில வகை மரபணு பிரச்சினைகளைக் குறைக்கவும் உதவுகிறது. உதாரணமாக, உடலுக்குத் தேவையான புரதங்களைத் தயாரிக்க முடியாத ‘சிகிளோசிச’ போன்ற மரபணு பிரச்சினைகளைச் சரிசெய்யும் முயற்சிகள் பரிசோதனையில் உள்ளன.

## செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மற்றும் மருத்துவம்

செயற்கை நுண்ணறிவு (AI) என்பது மருத்துவத் துறையில் புதிய வருகையாக இருந்தாலும், இன்று பல்வேறு நோய்களைக் கண்டறிதல், மருந்துகள் வடிவமைத்தல், அறுவை சிகிச்சைகள் போன்ற பல்வேறு பகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது. AI உடன் இயங்கும் சிஸ்டம்கள், கோடுகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் மூலம், மருத்துவர்கள் மிக விரைவில் மற்றும் துல்லியமாக நோய்களைக் கண்டறிய உதவுகின்றன. உதாரணமாக, கப்பிகிளோமா (Kaposi’s Sarcoma), புற்றுநோய் மற்றும் மூளை பாதிப்புகளைக் கண்டறிதல் ஆகியவற்றில் AI பயன்படுத்தப்படுகிறது.

## ஆரோக்கிய உணவு மற்றும் மருத்துவம்

அழுத்தமான வாழ்க்கைமுறை, தொற்றுநோய்கள், இதய நோய்கள் மற்றும் பிற உடல்நிலை பிரச்சினைகள் உள்ளதால், உணவு மற்றும் உடற்பயிற்சி முக்கியமான காரணிகளாக மாறியுள்ளன. ஆரோக்கிய உணவின் முக்கியத்துவத்தை விளக்குவதற்காக, மருத்துவர்கள் உணவு வழிகாட்டுதல்களையும், பொருளாதாரத்துடன் இணைந்து ஆரோக்கியமான வாழ்வைப் பெற உதவும் ஆலோசனைகளையும் வழங்குகிறார்கள். இதன் மூலம், மனிதர்கள் ஆரோக்கியமாக வாழும் வழிமுறைகளை பெறுகிறார்கள்.

## குழந்தைகள் மற்றும் வயதானவர்களுக்கு மருத்துவ பராமரிப்பு

குழந்தைகள் மற்றும் முதியவர்கள் ஆகிய இரு முக்கியமான குழுக்களுக்கான மருத்துவ பராமரிப்பு மிகவும் முக்கியமானதாக உள்ளது. குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள் மற்றும் உடல் நிலைகளைச் சரியாகக் கண்டறிந்து உடனடியாக சிகிச்சை வழங்குவது, வளர்ச்சி, சிகிச்சை மற்றும் தடுப்புக் காப்புக்கான முக்கியத்துவம் கொண்டது. வயதானவர்களுக்கு, அவற்றின் உடல் நிலைகள் மற்றும் நோய்களின் பராமரிப்பு, குறிப்பாக நோய்கள் பரவாமல் காக்கும் விதமாக மருத்துவர்கள் சிறப்பு முறைகளை உருவாக்குகின்றனர்.

மருத்துவத் துறையின் முன்னேற்றம் மனிதர்கள் வாழும் முறையை முழுமையாக மாற்றியுள்ளது. புதிய கண்டுபிடிப்புகள், புதிய சிகிச்சை முறைகள், புதிய தொழில்நுட்பங்கள், உலகளாவிய மருத்துவ பரிமாற்றங்கள் என்பவை தங்களுடைய கடமைகளை மிகச் சிறப்பாக மற்றும் செயலிழக்காமல் நிறைவேற்றுவதில் உதவுகின்றன. மருத்துவத் துறை குறித்த விழிப்புணர்வு, நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, நோய்கள், உடல்நிலை பிரச்சினைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# குழந்தைகளின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு

புஸ்பராசா மயூரதி

குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்தவும், துஷ்பிரயோகம், சுரண்டல், பாகுபாடு போன்ற வடிவங்களில் வன்முறையை அனுபவிக்கும் உலகெங்கிலும் உள்ள குழந்தைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தொழிலாளர்களாக தள்ளப்படும் குழந்தைகளை மீட்டெடுக்கவும் இந்த குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, நவம்பர் 20ஆம் திகதி உலகக் குழந்தைகள் தினம் என ஐ.நாவின் யுனிசெஃப் அமைப்பு அறிவித்துள்ளது.

அதுமட்டுமல்லாது, குழந்தைகள் நலனுக்காகக் கருத்தரங்குகள் ஆரம்பித்து, பரப்புரை என பல்வேறு நிலைகளில் உலகத் தலைவர்களுக்கு, குழந்தைகள் நலம் குறித்து கொள்கை முடிவுகள் எடுக்கக் கூறி வலியுறுத்துவது வரை பலவற்றைச் செய்து வருகின்றது.

அத்துடன், உலக மக்களிடையே குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு நிகரான அனைத்து வாழ்வியல் உரிமைகளும் சட்டமாக்கப்பட வேண்டும், அவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து #GoBlue என்ற பிரசாரத்தை நடத்தி வருகிறது.

மேலும், குழந்தைகள் உரிமை காப்பதற்காக நீல நிறத்தை அடையாளப்படுத்துகிறது.

குழந்தைகளின் பாதுகாப்பபு தொடர்பாக எத்தனை அமைப்புகள் காணப்பட்டாலும், ஏதோ ஒருவகையில், குழந்தைகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், நேட்டோ அமைப்பு நாடுகளில் உக்ரைன் இணையக் கூடாது என்பதற்காக, கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி முதல் ரஷ்யா, உக்ரைன் மீது யுத்தம் நடத்தி வருகிறது.

இந்தப் போரில் இதுவரை சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பலர் உயிரிழந்தும் உள்ளதாக யுனிசெஃப் அமைப்பு தெரிவித்துள்ளது.

போர் ஆரம்பத்ததில் இருந்து உக்ரைனில் குழந்தை பிறப்பு வீதம் மூன்றில் ஒரு பங்கு குறைந்து விட்டது. பல்லாயிரக்கணக்கான ஆண்கள் போருக்குச் சென்று விட்டார்கள்.

எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்பது உறுதியாகத் தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சில இளம் பெண்களும் தன்னார்வலர்களாகப் போருக்குச் சென்றுள்ளார்கள். மூன்று முதல் நான்கு மில்லியன் பேர் போலந்து, ஜேர்மனி மற்றும் பிரித்தானியா முதலான நாடுகளுக்கு தப்பிச் சென்று விட்டார்கள்.

அந்த பெண்களில் பலர் இந்த தாய்மை அடைந்திருக்க வேண்டும். ஆனால், அதற்கு வாய்ப்பில்லை. போர் முடிந்த பின், அவர்கள் உக்ரைனுக்கு திரும்புவார்களா? திரும்பமாட்டார்களா? தெரியாது எனவும் சில அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மொத்தத்தில், குழந்தை பெற்றுக்கொள்வதைக் குறித்தே தம்பதியரை யோசிக்க வைத்து விட்டது இந்த ரஷ்யா, உக்ரைன் மீது தொடுத்துள்ள போர்.

இதற்கமைய, இஸ்ரேல்- காசா போர் இன்னும் நீடித்து வரும் நிலையில், காசாவில் நிலவும் பஞ்சத்துக்கு மத்தியில் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் போதிய மருத்துவ வசதியின்மை காரணமாக உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு அறிக்கை தெரிவித்துள்ளது.

காசாவில் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் போதிய மருத்துவ வசதியின்மை காரணமாக உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்நிலையில், “காசா மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.

2023ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் பெண்கள் வேலைக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டது, இதனால் பெண்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த குடும்பங்கள் மிக மோசமான நிலையை அடைந்ததோடு குழந்தைகளுக்கான போசாக்கான உணவு வழங்குவதில் பல சிக்கல் நிலை ஏற்பட்டது. குழந்தைகளுக்கான போதிய உணவு கிடைக்கப்பெறாமையினால், அவர்களுக்கான சரியான ஊட்டச்சத்தும் கிடைக்காமல் போகிறது.

தற்போது, இலங்கையிலும் விலைவாசி அதிகரித்துள்ள நிலையில், பொருட்களுக்கும், அதிக தட்டுப்பாடு நிலவும் சூழல் காணப்படுகிறது.

இதனால் குழந்தைக்கான உணவு வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்படுவதற்கான அபாயமும் உள்ளது. இவ்வாறு உலகில் ஏதோ ஒரு வகையில் பல குழந்தைகள் பசி பட்னியாலும், வறுமையிலும் காணப்படுகின்றனர்.

குழந்தையின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்த யுனிசெஃப் அமைப்பு உதவுவது போல நம்மால் முடிந்த பல உதவிகளையும் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு வழங்கி பயன்பெறச் செய்வோம்.







# மாணவர்களுக்கு வாய்ப்பினை வழங்கும் ‘VTA’

ம.கலைச்செல்வன்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

இலங்கையில் பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்களிற்கு பல்வேறு பயிற்சி நெறிகளை இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை வழங்கி வருகிறது. பயிற்சி நெறிகள் தொடர்பில் காரைநகர் தொழிற்பயிற்சி நிலைய தலைமை அதிகாரி துதிராஜா அவர்களை நேர்கண்ட போது, இவ்வாறு தெரிவித்தார்.

**கேள்வி: பாடசாலை கல்வியை முடித்த மாணவர்களிற்கு மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஏன் அவசியம்?**

ஆரம்ப காலத்தில் தொழிற்பயிற்சி என்று மாத்திரமே தொழில்நுட்ப கல்லூரியில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஆனால், சர்வதேச ரீதியில் தரம் மிக்கதாகத் தொழில் வாய்ப்புகளை பெறக்கூடிய வகையிலான தொழிற்பயிற்சிகளை இளம் தலைமுறைக்கு வழங்க வேண்டிய தேவை தற்போதைய காலகட்டத்தில் ஏற்பட்டுள்ளது. சாதாரணமாகச் சிறிய தொழில்கள் கூட இன்று தொழிற்பயிற்சியாக மாறி விட்டன. சர்வதேச ரீதியிலான தொழில் தரத்தை இன்று சர்வதேசம் எதிர்பார்த்திருக்கிறது. எனவே, பாடசாலைக் கல்வியை விட்டு இடை விலகிய மாணவர்கள் மூன்றாம் நிலை தொழிற்கல்வி நிலையங்களில் தங்களுகுப் பிடித்த தொழிற் பயிற்சிகளை NVQ ஊடாக பெற்று எதிர்கால வேலை உலகிற்கேற்ப தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டு தனி நபர் அபிவிருத்திக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிப்பதற்கு மூன்றாம் நிலை தொழிற்கல்வி அவசியமாகிறது.

**கேள்வி: மூன்றாம் நிலை தொழிற்கல்வியை வழங்குவதில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை பிரதானமானது (VTA) அந்தவகையில், நீங்கள் வழங்குகின்ற பிரதான தொழிற்பயிற்சிகள் எவை?**

யாழ்பாணத்தில் ஆறு பிரதான தொழிற்பயிற்சி நிலையங்களினூடாக 30 ற்கும் மேற்பட்ட தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

யாழ். மாவட்ட தொழிற்பயிற்சி மையம் இகாரைநகர் தொழிற் பயிற்சி மையம், கைதடி தொழிற்பயிற்சி மையம், பணாடத்தரிப்பு தொழிற்பயிற்சி மையம், சுனணாகம் தொழிற்பயிற்சி மையம், வல்வெட்டிதுறை தொழிற்பயிற்சி மையம் ஆகியவற்றின் மூலம் பயிற்சி நெறிகள் வழங்கப்படுகின்றன.

அவற்றுள் பிரதானமாக சுற்றுலாத் துறை சார்ந்த பயிற்சி நெறிகளான உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுவோர் மற்றும் வெதுபாளர் (Baker) சமயலாளர் (Professional cookery) வரவேற்பாளர், அறை பராமரிப்பாளர் போன்ற கற்கைநெறிகளும் தவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கணினி வன்பொருள் திருத்துனர், ஆடை வடிவமைப்பாளர் போன்ற 30ற்கும் அதிகமான கற்கை நெறிகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு NVQ 4 தரத்திலான தொழிற்தகமை சான்றிதழ் கற்கை நெறி முடிவில் வழங்கப்படுகின்றன.

**கேள்வி: மூன்றாம் நிலைக் கல்வி என்று சொல்லப்படுகின்ற தொழிற் கல்வியை வழங்குகின்ற ஏனைய அரசாங்க, அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து VTA வழங்கும் பயிற்சி நெறி எவ்வாறு வேறுபடுகின்றது ?**

இலங்கையில் மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட பல்வேறு அரச மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் NVQ தொழிற் சான்றிதழை வழங்கி வருகின்றன.

ஆனால், வழங்கப்படும் தொழிற் கல்வி சான்றிதழ் ஒன்றாக இருந்தாலும், பயிற்சி நெறிகள் பயிற்றுவிக்கப்படுகின்ற முறைகளில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இலங்கை தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையை பொறுத்த வரையில் CBT முறைமூலமான தேர்ச்சி அடிப்படையிலான கல்விமுறையாகும்.

> **இலங்கையில் 25 பிரதான தொழிற்துறையின் கீழ் 350ற்கும் அதிகமான தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் காணப்படுகின்றன. அதில் கற்று வாழ்க்கையை வளமானதாக மாற்றிக் கொள்ளுங்கள்**

வகுப்பறை பயிற்சி வழங்கப்பட்டு அதன் மூலம் அதற்கான திறனை மாணவர்களிற்கு வழங்கி அதன் பிற்பாடு குறிப்பிட்ட சில கற்கைநெறிகளுக்கு வெளிக்கள பயிற்சி (OJT) வழங்கப்பட்டு அதன் மூலமாக NVQ தொழிற்சான்றிதழை வழங்கும் முறையாகும் . ஆனால், இலங்கை தேசிய யயிலுனர் பயிற்சி அதிகார சபை (NAITA) போன்ற ஏனைய மூன்றாம் நிலை தொழிற் கல்வி நிலையங்கள் பயிற்சி நெறியைப் பயிலும் மாணவர்களிற்கு ஆரம்பத்திலிருந்தே வெளிக்கள (OJT) பயிற்சிகளை வழங்கி அதனூடாக NVQ மட்டம் 4 வரையிலான தொழிற்கல்வி சான்றிதழ்களை வழங்குகின்றன.

**கேள்வி: RPL Clhf NVQ சான்றிதழ் பெறுவது எப்படி?**

RPL என்பது எதாவது ஒரு துறையில் வேலை செய்பவர்கள் மற்றும் 35 வயதிற்கு மேற்பட்டவர்கள் NVQ சான்றிதழைப் பெற எண்ணினால் RPL முறை என்று சொல்லப்படுகின்ற முன் கற்கை நெறி மதிப்பீட்டின் ஊடாக NVQ சான்றைப் பெறமுடியும்.

தொழிலில் முன்னனுபவம் மற்றும் தொழில் திறன்களைக் கொண்டவர்களுக்கு அவர்களின் திறன்கள் மதிப்பீடு செய்யப்பட்டு 6 மாதமோ 1 வருடமோ கற்கை நெறியைத் தொடராமல் NVQ 4 தொழில் சான்றிதழைப் பெற முடியும். பெரும்பாலும் தொழிலுக்காக வெளிநாடு செல்ல எண்ணியிருப்போர், தொழில் பதவி உயர்வு பெற எண்ணியிருப்போர் உயர் கல்வி டிப்ளோமா அல்லது பட்டம்) பெற எண்ணியிருப்போர் இவ் முறை மூலமாக அதிகளவில் NVQ 4 தமையை பெற்றுக் கொள்வதனை அவதானிக்க முடிகிறது.

**கேள்வி: மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற NVQ தொழற் கல்வி சான்றிதழின் முக்கியதுவம் என்ன?**

NVQ சான்றிதழ் உள்நாட்டில் மட்டும் அல்ல வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடிய அளவு சர்வதேச தரத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தகமை சான்றிதழாக காணப்படுகிறது.

இலங்கையில் NVQ மட்டம் 7 இனை பூர்த்தி செய்த நபர் ஒருவர் இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற நபருடன் ஒப்பிடுகையில் எல்லாவகைகளிலும் வலுமிக்கவராக காணப்படுவார்.

காரணம் NVQ முறை மூலம் பட்டம் பெறுபவர் செயன்முறை ரீதியான அனுபவம் கொண்டவராகவும் காணப்படுவார். இலங்கையில் 25 பிரதான தொழில் துறையின் கீழ் 250 மேற்பட்ட தொழிற் கற்கை நெறிகள் காணப்படுகின்றன இவற்றில் பெரும்பாலான கற்கை நெறிகள் NVQ மட்டம் 7 வரை பயின்று பட்டம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன .

**கேள்வி: NVQ என்று சொல்லப்படுகின்ற தொழிற் கல்வி சான்றிதழின் அடைவு மட்டங்கள் டுநளநடளமற்றும் அவற்றினை பயில்வதற்கான கால அளவுகள் என்ன?**

NVQ தொழிற் சான்றிதழ் மொத்தம் 7 படிநிலைகளினூடாக வழங்கப்படுகிறது. அதில், மட்டம் 1 தொடக்கம் 4 வரை சான்றிதழ் மட்டம் எனவும் 5 மற்றும் 6 மட்டங்கள் டிப்ளோமா மட்டம் எனவும் இறுதியாக மட்டம் 7 பட்டத்தைப் பெறுவதற்கான சந்தர்ப்பமாகக் காணப்படுகிறது.

கால அளவுகளைப் பொறுத்த வரைக்கும் கற்கை நெறிக்கு கற்கைநெறி வேறுபடும் இவற்றில் 1 தொடக்கம் 4 வரையான NVQ மட்டங்கள் 6 மாதம் தொடக்கம் ஒருவருடம் கொண்டதாகவும் NVQ 5 மற்றும் 6 இரண்டு தொடக்கம் மூன்று வருடங்கள் கொண்டதாகவும் காணப்படும்.

குறைந்தது 4 வருடத்திற்குள் நீங்கள் விரும்பிய கற்கை நெறியில் பட்டப்படிப்பினை நிறைவுசெய்து கொள்ளமுடியும்.

**கேள்வி: இறுதியாக பாடசாலை கல்வியை விட்டு இடை விலகிய மாணவர்களுக்கு மூன்றாம் நிலை தொழிற்கல்வியில் இணைவது தொடர்பில் நீங்கள் கூறுவது என்ன?**

கல்வியை விட்டு இடை விலகிய மாணவர்களுக்கு கூற விரும்புவது

என்னவென்றால், உங்களால் உயர் கல்வியைத் தொடர முடியவில்லை என்று கவலைப்பட வேண்டாம். இலங்கையில் 25 பிரதான தொழிற்துறையின் கீழ் 350ற்கும் அதிகமான தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் காணப்படுகின்றன.

அவற்றுள் உங்களுக்கு பிடித்தமான கற்கை நெறியை உங்களுக்கு அருகில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களுக்குச் சென்று, கற்று, அந்த துறைகளின் மூலம் டிப்ளோமா மற்றும் பட்டங்களைப் பெற்று எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ற வகையில் உங்களைத் தயார்ப்படுத்தி வாழ்க்கையை வளமானதாக மாற்றிக் கொள்ளுங்கள்.

VTA
ශ්‍රී ලංකා වෘත්තීය පුහුණු අධිකාරිය
இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை
Vocational Training Authority of Sri Lanka

தொழில்முறை கால்பந்தாட்ட வீரர்களின் சர்வதேச சம்மேளனத்தின்

# இவ்வாண்டு பதினொருவரில் மெஸ்ஸி இல்லை



தொழில்முறை கால்பந்தாட்ட வீரர்களின் சர்வதேச சம்மேளனத்தின் இவ்வாண்டுக்கான பதினொருவரில் ஆர்ஜென்டீனாவின் லியனல் மெஸ்ஸி இடம்பெறவில்லை.

2006ஆம் ஆன்டுக்குப் பின்னர் முதற்தடவையாக பதினொருவரில் மெஸ்ஸி இடம்பெறவில்லை.

மெஸ்ஸியை முன்களத்தில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் எர்லிங் ஹலான்ட், ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டின் கிலியான் மப்பே, வின்ஷியஸ் ஜூனியர் ஆகியோர் பிரதியிட்டுள்ளனர்.

சக வீரர்களாலேயே இத்தெரிவுகள் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில், மட்ரிட்டின் மத்தியகளவீரரான ஜூட் பெல்லிங்ஹாமே அதிகபட்சமாக 11,176 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இப்பட்டியலில் மட்ரிட்டின் பின்களவீரர்களான டனி கர்வகால், அந்தோனியோ ருடிகர், மத்தியகளவீரர் டொனி க்றூஸ் ஆகியோருடன் சிற்றியின் கோல் காப்பாளர் எடெர்சன், மத்தியகளவீரர்களான கெவின் டி ப்ரூனே, றொட்றி ஆகியோருடன் லிவர்பூலின் பின்களவீரர் வேர்ஜில் வான் டிஜிக்கும் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

# சிம்பாப்வேக் குழாமில் சாம், டொம்மின் சகோதரர்



இங்கிலாந்தின் சகலதுறைவீரர்களான சாம் கர்ரன், டொம் கர்ரன் ஆகியோரின் சகோதரரான பென் கர்ரன், ஆப்கானிஸ்தானுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான குழாம்களில் இடம்பெற்றுள்ளார்.

சிம்பாப்வேயின் முன்னாள் வீரரான கெவின் கர்ரனின் மகனான பென் கர்ரன், 2022ஆம் ஆண்டு வரையில் இங்கிலாந்து கவுண்டி கழகமான நொர்தம்ஷையருக்காக விளையாடி பின்னர் சிம்பாப்வேயில் விளையாடி வருகிறார்.

அந்தவகையில் முதற்தடவையாக சிம்பாப்வே குழாமுக்கு 28 வயதான பென் கர்ரன் அழைக்கப்பட்டுள்ளார்.

## ஆப்கானிஸ்தான் பயிற்சியாளராகத் தொடரும் ட்ரொட்

ஆப்கானிஸ்தானின் தலைமைப் பயிற்சியாளராக அடுத்தாண்டு இறுதி வரையில் ஜொனதன் ட்ரொட் தொடரவுள்ளதாக அந்நாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஓராண்டு நீடிப்பு ட்ரொட்டுக்கு வழங்கப்பட்டமையடுத்தே அடுத்தாண்டு இறுதி வரையில் ஆப்கானிஸ்தானின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக ட்ரொட் தொஅரவுள்ளார்.

ட்ரொட்டின் கீழ் முதற்தடவையாக சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிகளுக்கு இவ்வாண்டு ஆரம்பத்தில் தகுதி பெற்றதுடன், கடந்தாண்டு உலகக் கிண்ணத் தொடரில் முதல் எட்டு இடங்களுக்குள் வந்து அடுத்தாண்டு முதற்தடவையாக சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கும் தகுதி பெற்றுள்ளது.




# லெவர்குசன் செல்லும் குல்லர்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் மத்தியகளவீரரான அர்டா குல்லரைக் கைச்சாத்திட ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர் லெவர்குசன் அடுத்தாண்டு முயலுமெனக் கூறப்படுகிறது.

கடந்தாண்டு மட்ரிட்டில் இணைந்தபோதும் விளையாடுவது 19 வயதான குல்லர் அரிதாகும். மட்ரிட்டுடன் எதிர்வரும் 2029ஆம் ஆண்டு வரையில் குல்லர் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ளார்.



## மட்ரிட் செல்லும் பல்மர்?




இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முன்களவீரரான கோல் பல்மரின் தொடர்ச்சியான பெறுபேறுகள், ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டின் கவனத்தை ஈர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செல்சியுடன் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு வரையில் 22 வயதான பல்மர் ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கிறாரென்பது குறிப்பிடத்தக்கது.

தென்கொரியா

தென்கொரியா ஜனாதிபதி

# வெளிநாடு செல்ல தடை



தென்கொரியாவில், அவசர நிலை அறிவித்த விவகாரத்தில், தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக்-இயோல், வெளிநாடுகளுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

தென்கொரியாவில், ஜனாதிபதி யூன் சுக்-இயோல் தலைமையிலான மக்கள் அதிகார கட்சி ஆட்சி நடைபெறுகிறது. கடந்த வாரம், தென்கொரியாவில் இராணுவ அவசர நிலை பிரகடனத்தை ஜனாதிபதி யூன் சுக்-இயோல் அறிவித்தார். இவரது இந்த முடிவுக்கு ஆளுங்கட்சியிலேயே கடும் எதிர்ப்புகள் கிளம்பின.

இதனையடுத்து, அவசரநிலை பிரகடனம் மீளப் பெறப்பட்டது. எனினும், அவசரநிலையைச் செயற்படுத்தியதற்காக, ஜனாதிபதி பதவி விலகக் கோரி நாடு முழுவதும் மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

இதனால் நாட்டு மக்களிடம் அவர் பகிரங்க மன்னிப்பு கோரினார். எனினும், அவருக்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மறுபுறம் அவசரநிலையைப் பரிந்துரை செய்ததற்காக அவர் மீது விசாரணை நடத்த அரசு முடிவு செய்துள்ளது.

இதனால், யூன் சுக்-இயோல் தப்பிச் செல்லாமல் இருக்க, வெளிநாடுகளுக்குப் பயணம் செய்ய அவருக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

சிரியா

கிளர்ச்சிக் குழுவினருக்கு

## ஒத்துழைக்கும் பிரதமர்



நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காக, கிளர்ச்சிக் குழுவினருக்கு சிரியா பிரதமர் முகமது காஜி ஜலாலி ஒத்துழைப்பு கொடுத்து வருகிறார்.

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்தின் படைகளுக்கு எதிராக நீண்ட காலமாக ஆயுத மோதலில் ஈடுபட்டு வந்த கிளர்ச்சிக் குழுவினர் நாட்டின் பெரும்பகுதிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இதையடுத்து 50 ஆண்டு கால ஆசாத் குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. ஜனாதிபதி ஆசாத் பாதுகாப்பு கருதி நாட்டை விட்டு வெளியேறி ரஷ்யாவில் தஞ்சம் அடைந்துள்ளார். இதனால் சிரியாவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே, இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் இடங்கள் மற்றும் நீண்ட தூர ரொக்கெட்டுகள் தீவிரவாதிகளின் கைகளில் சிக்காமல் இருக்க வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருவதாக, இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

மேலும், அரசுப் படைகள் வெளியேறிய பகுதிகளில் இஸ்ரேல் ஒரு பாதுகாப்பு மண்டலத்தைக் கைப்பற்றியுள்ளது.

ஆசாத் நாட்டை விட்டுச் சென்ற பிறகு அவரது ஆட்சியில் முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் மற்றும் பெரும்பாலான உயர் அதிகாரிகளும் வெளியேறிவிட்டனர். அதேசமயம், பிரதமர் முகமது காஜி ஜலாலி தொடர்ந்து பதவியில் நீடிக்கிறார்.

நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும், புதிய தலைமையை கொண்டு வருவதற்காகவும் கிளர்ச்சிக் குழுவினருக்கு ஒத்துழைப்பு கொடுத்து வருகிறார்.

துருக்கி

ஹெலிகொப்டர் விபத்தில்

## 6 இராணுவ வீரர்கள் பலி



துருக்கியில், செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் 6 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

துருக்கியின் இஸ்பார்டா மாகாணத்தில் உள்ள இராணுவ தளத்தில்,வழக்கமான பயிற்சிகள் நடைபெற்றன.

அப்போது பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஹெலிகாப்டர்கள் ஒன்றுக்கொன்று மோதி விபத்துக்குள்ளாகின. இதில் ஒரு ஹெலிகாப்டர் கீழே விழுந்து சுக்குநூறாக நொறுங்கியது.

அதேசமயம் மற்றொரு ஹெலிகாப்டர் பத்திரமாகத் தரையிறங்கியது.

எனினும் இந்த விபத்தில் இராணுவ ஜெனரல் உட்பட 6 வீரர்கள் உயிரிழந்தனர். இந்த சம்பவம் குறித்து, அந்நாட்டு விமான போக்குவரத்துத் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மணிப்பூர்

கலவரத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட

## சொத்து விபரத்தை தாக்கல் செய்யுமாறு உத்தரவு



மணிப்பூர் இனக் கலவரத்தில் எரிக்கப்பட்ட மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட சொத்து விபரத்தை தாக்கல் செய்யுமாறு, அம்மாநில அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மணிப்பூரில், கடந்த 2023ஆம் ஆண்டு, மே 3ஆம் திகதியன்று, மைத்தேயி, குகி சமூகத்தினர் இடையே மோதல் உருவானது. இந்த மோதல் கலவரமாக மாறியதில் இரு தரப்பிலும் 200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்து, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அம்மாநிலத்தில் தொடர்ந்து வன்முறை நிகழ்ந்து வருகிறது.

இதற்கிடையில் மணிப்பூர் கலவரம் தொடர்பான வழக்கில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம், மறுவாழ்வு மற்றும் இழப்பீடு வழங்குவதை மேற்பார்வையிட உயர் நீதிமன்ற முன்னாள் பெண் நீதிபதிகள் 3 பேர் கொண்ட குழுவை அமைக்க உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் உத்தரவிட்டது.

மேலும் கிரிமினல் வழக்குகளில் விசாரணையை கண்காணிக்குமாறு மகாராஷ்டிர முன்னாள் காவல்துறை தலைவர் தத்தாத்ரே பத்சல்கிகரை கேட்டுக்கொண்டது.

இந்நிலையில் மணிப்பூர் கலவரம் தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா, நீதிபதி சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில்,திங்கட்கிழமை(9) மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது கலவரத்தின்போது, முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ எரிக்கப்பட்ட மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட வீடுகள் மற்றும் சொத்துகள் குறித்த விவரத்தை 'சீல்' வைக்கப்பட்ட கவரில் தாக்கல் செய்யுமாறு மணிப்பூர் அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மேலும் குற்றவாளிகள் மற்றும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரத்தை வழங்கவும் உத்தரவிட்டனர். இதையடுத்து, இந்த வழக்கு விசாரணையை ஜனவரி 20ஆம் திகதி வரை ஒத்திவைத்தனர்.

ராஜஸ்தான்

## ஆழ்துளை கிணற்றில் விழுந்த சிறுவன்

ராஜஸ்தான் மாநிலம், தவுசா மாவட்டத்தில், திங்கட்கிழமை (9), திறந்தவெளி ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்த 5 வயது சிறுவனை மீட்கும் பணி தீவிரமாக இடம்பெற்று வருகின்றது.

சம்பவத்தன்று ஆர்யன் என்ற சிறுவன் கலிகாட் கிராமத்தில் உள்ள வயல்வெளியில், விளையாடிக் கொண்டிருந்த போது, சுமார் 150 அடி ஆழமுள்ள ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்துள்ளான்.

இது குறித்து தகவலறிந்த தேசிய மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சிறுவனை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். முன்னதாக குழாய் மூலம் சிறுவனுக்கு ஒக்சிஜன் வழங்கப்பட்டுள்ளது. மேலும்,



ஆழ்துளைக் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள கெமெராவின் மூலம் சிறுவனின் நடவடிக்கையைக் கண்காணித்து வருவதாக, மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 11 டிசெம்பர் 2024 இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.